செய்தி வெளியீடு எண்: 618 நாள்:25.08.2020

# செய்தி வெளியீடு

## அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலை படிப்பிற்கு பதிவு செய்து கட்டணம் செலுத்தி, சான்றிதழ் பதிவேற்றம் செய்யாதவர்களுக்கும் பதிவேற்றம் செய்ய வாய்ப்பு

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் விண்ணப்பம் பதிவு செய்ய www.tngasa.in என்ற இணையதள முகவரி உருவாக்கப்பட்டு 20–07–2020 முதல் 31–07–2020 வரை விண்ணப்பப்பதிவு நடைபெற்றது. மொத்தம் 3,16,795 மாணாக்கர்கள் விண்ணப்பப்பதிவு செய்துள்ளார்கள். அதில் 2,18,810 மாணாக்கர்கள் கட்டணம் செலுத்தியுள்ளார்கள். மேலும், 1,35,832 மாணாக்கர்கள் தங்களது சான்றிதழ்களை பதிவேற்றம் செய்துள்ளார்கள். மேலும், சேர்க்கை தொடர்பாக, 4,999 மாணாக்கர்கள் நேரிடையாகவும், 6,725 மாணாக்கர்கள் தொலைபேசி வாயிலாகவும், 2,990 மாணாக்கர்கள் மின்னஞ்சல் வாயிலாகவும் தங்களது சந்தேகங்களை கேட்டறிந்து விளக்கம் பெற்றுள்ளனர்.

- சான்றிதழ் பதிவேற்றம் 1–8–2020 முதல் 10–08–2020 வரை நடைபெற்றது. மாணாக்கர்களின் மதிப்பெண்களை பள்ளிக்கல்வித் துறை மூலம் பெற்ற மதிப்பெண் பட்டியலுடன் ஒப்பீடு செய்து சரிபார்க்கப்பட்டது. இணையதளத்தில் பதிவு செய்து, கட்டணம் செலுத்தி சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யாதவர்கள் தங்கள் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வசதியாக www.tngasa.in இணையதளத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர பதிவு செய்துள்ள மாணாக்கர்களின் தரவரிசை பட்டியல் அந்தந்த அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இணையதளத்தில் 26–08–2020 அன்று வெளியிடப்படும். மேலும், மாணாக்கர்களின் சேர்க்கை மின்னஞ்சல் மூலமாக மாணாக்கர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைக்கு தேர்வாகியுள்ள மாணாக்கர்கள் அந்தந்த கல்லூரி இணையதளம் மூலம் சேர்க்கை கட்டணம் செலுத்தி சேர்க்கையை உறுதி செய்துகொள்ளலாம்.

- அசல் சான்றிதழ் சமர்ப்பித்தல் பொறுத்தவரை அந்தந்த மாவட்டத்திலுள்ளவர்கள் அம்மாவட்டத்திலுள்ள கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் நாள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் சென்று சான்றிதழ்களை சமர்ப்பித்து ஒப்புகை பெறலாம். வெளிமாவட்டத்தில் உள்ளவர்கள், www.tngasa.in இணையதளத்தில் உள்ள விவரப்படி, அவர்கள் வசிக்கும் மாவட்டத்திலுள்ள மாவட்ட சேவை மையத்தில் நேரில் சென்று அனுமதிக்கப்பட்ட நேரத்தில் சான்றிதழ்களை சமர்ப்பித்து ஒப்புகை பெறலாம்.

**கே.பி. அன்பழகன்**
**உயர்கல்வித் துறை அமைச்சர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**